1978 மார்ச் 16]

திரு. மு. அரங்கநாதன்: தலைவரவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்களின் கீழும் நகராட்சிகளின் கீழும் பணி யாற்றும் செகண்டரி கிரேடு, ஹையர் கிரேடு, ஆசிரியர்கள் சென்னை மாநகராட்சியின் நிர்வாகத்திற்கு மாற்றம் தேவைப் படும் நேரத்தில் அவர்களுடைய தகுதி குறையாமல், சர்விஸ் குறையாமல் மாற்றம் செய்ய வழிவகை உண்டா? உண்டெனில் இதற்கு முன் யாரேனும் விண்ணப்பம் செய்திருக் கிறார்களா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் மாநகராட்சி அளவிலே உள் நிலைமைகளைக் கேட்கிறார்கள். அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் தான் விவரம் கூற முடியும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலேயும், நகராட்சிப் பள்ளி களிலேயும் ஆசிரியர் வேலைக்கு நியமிக்கப்படும்பொழுது எந்த விதியின்கீழ் அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, தனி யாகக் கேள்வி போட்டு விவரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

கோவை நகராட்சியிலுள்ள தினக்கூலித் தொழிலாளர்கள்.

*596 வி—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரசபையின் கீழ் பணிபுரியும் என்.எம் ஆர். தொழிலாளர்களுக்கு பொதுப்பணித்துறையின் கீழ் பணி புரியும் என்.எம்.ஆர். தொழிலாளர்களுக்குள்ள ஊதிய விகிதம் மற்ற சலுகைகள் கொடுக்கப்படாமலிருப்பது அரசு கவனத் துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) மற்றும் (ஆ): அரசின் ஆய்வில் உள்ளது.

[1978 மார்ச் 16

(முற்பகல் 9–40)

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கோவை நகராட்சியின் கீழ் 400-க்கும் மேற்பட்ட என்.எம்.ஆர். தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இன்று மின்சார வாரியத்தின்கீழ் உள்ள என்.எம்.ஆர்.-கள் கன்பர்மேஷன் ஆகிவிட்டார்கள். அதைப் போல 3 வருடம் சர்வீஸ் ஆன என்.எம்.ஆர்-களை கன்பர்மேஷன் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா? மற்ற சலுகைகளை அளிக்க ஏற்பாடு செய்யுமா? இதற்குக் காலதாமதம் ஏன் ஏற்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அவர்கள் கேட்டிருக்கிற அந்தக் கோரிக்கை நியாயமானதான். அரசு அதைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. அது கோவையைப் பொறுத்தது மட்டுமல்ல. தமிழகத்திலே உள்ள எல்லா நகராட்சிகளைப் பொறுத்தது. அந்த அடிப்படையிலே 99 நகராட்சிகளில் பணிபுரியும் இந்த ஊழியர்களை நிரந்தரம் ஆக்குவதன் மூலமாக எவ்வளவு செலவாகும் என்று கணக்குப் பார்க்கப்பட்டது. 7,57,543 ரூபாய்கள் ஆகும் என்று நகராட்சிகளின் ஆய்வாளர் தெரிவித்திருக்கிறார். அந்த நிதியைக் கணக்கில் எடுத்து அரசு இதைத் தீவிரமாக பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

இராயபுரத்திலுள்ள இரயில்வே மேம்பாலம்.

*597 வினு—திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:—

சென்னை, இராயபுரம் மன்னார்சாமி கோயில் தெருவிலுள்ள இரயில்வே மேம்பாலத்தினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே அந்த இராயபுரம் பாலம் பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இப்போது பாழ் அடைந்து பழுதாகி இருக்கிறது. அந்தப் பாலத்தை அகலப்படுத்த உத்தேசம் இல்லை என்றாலும் அதைப் பலப்படுத்த உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அகலப்படுத்துவதற்கு இயலாத காரணம் அதன் பக்கத்திலே உள்ள எண்ணை சேமிப்புத் தொட்டிகள்தான் காரணம். அந்தப் பாலத்தைப் பலப்படுத்துவதற்கு உரிய முயற்சியிலே அரசு ஈடுபட்டிருக்கிறது.